செ.வெ.எண்: 12 நாள்: 04.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.266.30 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.08.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், பாக்குடி ஊராட்சி, கோங்குடிப்பட்டி கோரையாற்றின் குறுக்கே நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.260.90 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர்மட்ட பாலம் கட்டுமானப் பணியையும், மங்களாப்பட்டியில் முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் தலா ரூ.2.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட 2 பசுமை வீடுகள் கட்டுமானப் பணியையும், பாக்குடியில் இந்திரா காந்தி நினைவு குடியிருப்பு கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.1.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வீட்டின் கட்டுமான பணியையும், நாங்குபட்டி ஊராட்சியில் மேட்டுக்கடை முதல் மாங்குடி சாலை வரை சாலை ஓரங்களில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் நடப்பட்டுள்ள மரப்போத்துகள் பணியையும் என மொத்தம் ரூ.266.30 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது கிராமங்களில் உள்ள கருவேல மரங்களை முழுவதுமாக அகற்றவும், நடப்பட்டுள்ள மரப்போத்துகளை தினமும் நீர் ஊற்றி பராமரிக்கவும், பாலம் கட்டுமான பணியில் மழை நீர் தடையின்றி செல்லும் வகையில் மதகுகளை அதிக உறுதியுடன் அமைக்கவும், முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், மேலும் நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பாக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவ , மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சத்துணவின் தரத்தினை சாப்பிட்டு ஆய்வு செய்ததுடன், எம்.எம்.576 மருதம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி லிட் சார்பில் செயல்படும் ஹச்.பி.163 பாக்குடி அங்காடியில் பொருள் இருப்பு பதிவேடு, பொருள் விநியோக பதிவேடு, உணவுப் பொருட்களின் எடை போன்ற பல்வேறு தகவல்களை கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பாக்குடியில் தமிழ்நாடு மின் தொடர்பு பகிர்மானக் கழகம் மூலம் அமைக்கப்பட்டுள்ள 110/33/11 கி.வோ. துணை மின் நிலையத்தினையும் பார்வையிட்டார். மேலும் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பதிவேடுகள் மற்றும் பணிகளையும் பார்விட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.விஜயநாதன், திருமதி உதயகுமாரி, வட்டாட்சியர் திரு.மனோகரன், உதவி பொறியாளர் திரு.கிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**